# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 43/2021 நாள்.03.02.2026

### PW2- திருமதி. அமீர்தசெல்வி , க/பெ. திரு.மதியழகன்

1, 2 பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

தாவா சொத்து என் பாட்டி துளசியம்மாள் பெயரில் 1944 கிரையம் செய்யபட்ட சொத்து என்றால் ஆமாம். அதுதவிர வேறு சொத்துக்கள் இல்லை என்றால் ஆமாம். பாட்டி பெயரில் உள்ள கிரையத்தில் என்ன சொத்து உள்ளதோ அதை பாகம் கோருகிறோம் என்றால் ஆமாம். என் அப்பா இறந்தது எப்போது என்றால் 17.3.1993. என் அம்மாவுக்கு சுயவருமானம் உள்ளதா என்றால் இல்லை கடை வாடகை வருமானம். என் அப்பா தஞ்சாவூரில் சோமுதேவர் மகன் ஆறுமுகம் என்பவரிடம் ரூபாய் 1,15,000/- பெந்தக கடன் எழுதி கொடுத்த கடன் வாங்கியிருந்தார் என்றும், அதை 1, 2 பிரதிவாதிகள் அப்பா இறந்தபிறகு திருப்பினார் என்று சொன்னால் இல்லை. தாவா சொத்தின் ஒரு பகுதியை வெங்கடாச்சலம் மகன் பாஸ்கர் என்பவரிடம் 60, 000 கிரையம் பேசி ரூ.50,000 முன்பணம் வாங்கியிருந்தார் என்றும், அதுமேலும் ஒருவருடம் நீட்டிக்கபட்டது என்றும், 2ஆம் பிரதிவாதி என் அப்பா இறந்தபிறகு மீட்டார் என்றால் சரியல்ல. என் அப்பா இறப்பதற்கு முன்பு 15எ நவநீதபுரத்தில் வசித்தார் என்றால் ஆமாம். 1996 டிசம்பர் 24ஆம் தேதி குறிப்பிடப்பட்டுள்ள கையெழுத்து என் அப்பவுடைதல்ல. சோமுத்தேவர் மகன் ஆறுமுகத்திடம் எனது அப்பா கையெழுத்து போட்டு பெந்தக கடன் பெற்றார் என்றால் இல்லை. ஏபிஆர் பைனான்ஸில் என் அப்பா கடன் வாங்கினார் என்றும், அதை அவர் கட்டாததால் தஞ்சாவூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண் 16/1997 அவருக்கு எதிராக தாக்கல் செய்யபட்டு அவர் இறந்தபிறகு நான் உள்ளிட்ட எல்லா வாரிசுகளும் அதில் கட்சி சேர்க்கபட்டோம் என்றால் தெரியாது. அந்த கடனை நான் அடைக்கவில்லை என்றால் ஆமாம். ஆர் ஆனந்தராமன் என்பவர் அ.வ.எண் 195/2004 எனது அப்பா இறந்தபிறகு எங்களை வாரிசுகளாக சேர்த்து நிறைவேற்கு மனு தாக்கல் செய்யபட்டது என்றால் தெரியாது. எனது அம்மா கேன்சர் நோயால் பாதிக்கபட்டார் என்றால் ஆமாம். அவர் தஞ்சாவூரில் இருந்தார் என்றால் ஆமாம். அவருக்கு தஞ்சாவூரில் கீர்த்தனா மருத்துவமனை, விநோதகன் மருத்துவமனையில் சிகிச்சை எடுக்கபட்டது என்றால் இல்லை. கேன்சருக்காக திருச்சியில் சேர்க்கபட்டது. கிமோ தெரபி தஞ்சாவூரில் இல்லாததால் திருச்சியில் சேர்க்கபட்டது என்றால் சரியல்ல. அந்த செலவுகள் 1, 2 பிரதிவாதிகளால் செய்யபட்டது என்றால் சரியல்ல. என் அம்மா இறந்தபோது 3வது வாதி சுமதி வரவில்லை என்றால் அவர் சொந்தகாரணத்தினால் வரவில்லை. அதைபோல் அப்பா

இறந்தபோது பெரியதம்பி வரவில்லை. சுமதி வராததற்கு காரணம் அவர் தஞ்சாவூரில் கடன் வாங்கியிருந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கடை கட்டபட்டது எப்போது என்றால் 2002 அல்லது 2003 இருக்கும். எப்போது கட்டி முடிக்கபட்டது என்றால் 2004, 2005 இருக்கும், எல்ஐசி லோன் வாங்கிதான் கட்டி முடித்தோம். எல்ஐசி ஆபிஸ்க்கு போயிருக்கேனா என்றால் திருச்சி ஆபிஸ்சில்தான் வாங்கினோம் நான் போய்உள்ளேன் இந்த விபரத்தை பிராதில் சொல்லவில்லை என்றால் தற்போது கேட்டதால் சொல்லுகிறேன். எவ்வளவு லோன் வாங்கினேன் என்றால் 10 லட்சம். எப்போது கட்டிமுடிக்கபட்டது என்றால் 2013. கட்டிடத்தில் எவ்வளவு வாடகை வந்தது என்றால் என் அம்மாதான் வாங்கினார், அம்மாதான் எல்ஐசி லோன் கட்டினார். நிரூபணவாக்குமூலத்தில் மாத வாடகை ரூபாய் 62000 சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். வருடத்திற்கு 7.50 லட்சம் என்றால் ஆமாம். கடைகள் எவ்வளவு நீள, அகலம் என்றால் அளவு தெரியாது. கட்டிய ஒப்பந்ததாரர் யார் என்றால் தெரியாது. என் அம்மாதான் இருந்து பார்த்தார். எல்ஐசியில் லோன் வாங்குவதற்கு நான் ஏதாவது ஆவணம் கொடுத்துள்ளேனா என்றால் 5பேரும் போட்டோ ஒட்டி கையெழுத்துபோட்டுள்ளோம். கைலாசம் என்பவரிடம் ரூ.7லட்சம் கட்டிடம் கட்ட கடன் வாங்கபட்டது என்றால் தெரியாது. 2013 லிருந்து 2025 வரை வாடகை எதுவும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. கடன் அடைக்கபட்ட சரியான தேதி தெரியாது என்றால் ஆமாம். 1, 2 பிரதிவாதிகளிடம் வாடகை கேட்டோம் என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் அண்ணன், தம்பியிடம் பேசுவதற்கு ஆவணம் இல்லை. நான் என் தங்கை மூவரும் சேர்ந்து கேட்டோம். வா.சா.ஆ.1 அவர் கேட்கவில்லை என்றும், என்னுடைய வாரிசும் அவர் வாரிசும் கேட்டதாக சொல்லியுள்ளார் என்றால் ஆமாம் வழக்கு போடுவதற்கு முன்பாக எனது மகனும் அவர் மகனும் போய்கேட்டார். 15.12.2000த்தில் எனது அம்மா இருக்கும்போது வாய்மொழியாக பாகம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நிலமதிப்பு அதிகமாகிவிட்டதால் தாவா சொத்தில் நாங்கள் பாகம் கோருகிறோம் என்றால் சரியல்ல. நிரூபணவாக்குமூலத்தில் 8வது பத்தி வரை வழக்கை பற்றியும், 9வது பத்தியில் பாகம் பிரிக்கபட்டது சொல்லுவதும் 40,000 செலவு செய்ததாக சொல்லியுள்ளதும் தவறு என்று மறுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது அப்பா 3ஆம் நபரிடம் கடன் வாங்கிவிட்டார் என்றும் அடைக்காமல் இறந்துவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல என் அப்பா கொஞ்சம் கடன் வாங்கியிருந்தார் அவர் ஒய்வு பெற்று வந்த பணத்தை கொண்டு எனது அம்மாவே அடைத்துவிட்டார். என் அப்பா ஒய்வு பெற்று எவ்வளவு பணம் வந்தது என்றால் எங்களுக்கு தெரியாது. என் அப்பா கடனை அடைத்தது 1, 2 பிரதிவாதிகள் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள கடைகளை கட்டியது 1, 2 பிரதிவாதிகள் மட்டும் என்றால் சரியல்ல.

கடைகள் வருமானத்தை கோர எங்களுக்கு அருகதை இல்லை என்றால்சரியல்ல. அப்பாவின் கடனை அடைக்காமல் சொத்துகளில் பங்கு கோருவது சட்டத்திற்கு முரணானது என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.02.03 18:50:53 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.